# இயேசுவே வாரும்

தொடர்பு முகவரி

சகோ. காலேப் யோசுவா
# 11, திருமால் நகர்,
பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22:20

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601
தூத்துக்குடி மாவட்டம்

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி ஏழாம் சபைக் கால தூதனா அல்லது செய்தியா?

1. நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே, பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி யடைவதற்காகவும், சுவிசேஷகனாயிருக்கிற நான் வேற்றுமையான உபதேசங்களையும், விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீகப் பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல், தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற லௌகீக சம்பந்தமான சுய வியாக்கியானங்களை தந்திரமாக சபைக்குள் நுழைக்கும் வஞ்சிக்கிற ஆவிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று எக்காள சத்தத்தை இந்தச் செய்தித் தொகுப்பின் மூலம் தொனிக்கச் செய்வது எனக்கு நலமாய் தோன்றிற்று. பிரியமானவர்களே, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், இரக்கமும், சமாதானமும் உண்டாவதாக. ஆமென்.

2. ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் என்று நாம் 1. தீமோ. 4 :1ல் வாசிக்கிறோம். நாம் அப்படிபட்டதான காலத்தின் நாட்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவனுடைய வார்த்தையும் நிறைவேறிக் கொண்டு வருகிறது.

3. சமீப நாட்களில் Voice of God Recordings, India Office ல் இருந்து "CATCH THE VISION " என்ற ஒரு வியாசம் (article) கிடைத்தது. மேலும் சென்னை, தண்டையார் பேட்டை, மணவாட்டி கூடாரத்திலிருந்து வெளியிடப்பட்ட மெய் விசுவாசம் நம் ஜீவியத்தை மாற்றும் என்ற தலைப்பில் ஒரு சிறு புத்தகமும் என் கைக்குக் கிடைத்தது. இந்த இரண்டிலும் நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்தும், இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்தும் கற்று நிச்சயித்து கொண்டவைகளுக்கு மாறாக நான் கண்ட பிசாசின் உபதேசத்தை உங்களுக்கு எழுதி, இப்படிப்பட்ட கள்ள உபதேசங்களிலிருந்து உங்களை காத்துக் கொள்ளுங்கள் என எச்சரிக்க வேண்டியது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

4. இந்த மாறுபாடான உபதேசம் குறித்து Voice of God Recordings, India Office பொறுப்பாளர் சகோ. ஜோயல் மூடி பரமானந்தம் அவர்களை சந்தித்து விளக்கம் கேட்க வேண்டும் என நினைத்தேன். ஜனவரி 12ம் தேதி மதியம் Voice of God Recordings, அலுவலகம் சென்றேன். அவர் வெளியே சென்று விட்டதாகக் கூறினார்கள். ஆதலால் அங்குள்ள சகோதரியிடம் நான் வந்து சென்றதாக சகோதரரிடம் கூறவும். மேலும் நானும், சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு. பாஸ்டர் சகோ. கே.ஜாண் ஐசக் அவர்களும் 14ம் தேதி காலை 10 மணிக்கு சகோதரரைச் சந்திக்க வருவதாக கூறிச் சென்றேன்.

5. இந்நிலையில், 14ம் தேதி காலை 10 மணிக்கு நானும் பாஸ்டர் ஐசக் அவர்களும் Voice of God Recordings அலுவலகத்தை அடைந்து சகோ. ஜோயலைச் சந்திக்க, அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் எங்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக சகோ. பிரபு அவர்கள் வந்து சகோ. ஜோயல் Recording Room ல் இருப்பதாகவும், இரு மாதங்களுக்கு அவரை சந்திக்க முடியாது எனவும், ஆதலால் நாங்கள் வந்த விபரத்தை அவரிடம் கூறினால் அவர் அதை சகோ. ஜோயலிடம் கூறுவதாகக் கூறினார். நாங்கள் இருவரும் பல நோக்குடன் அவரை சந்தித்து கருத்து பரிமாறிக் கொள்ள இருந்தோம். அவைகளை சகோ. பிரபுவிடம் பகிர்ந்து கொள்வதில் பிரயோஜனம் எதுவும் இருக்காது என்பதினால் மனம் நொந்து வெளியே வந்தோம். ஒரு வேளை கர்த்தருடைய வருகை இரு மாதங்களுக்குள் வந்து விட்டால் இக்கரையில் சந்திக்க முடியாத சகோதரனை அக்கரையிலாவது சந்திக்க முடியுமா என புலம்பிக் கொண்டு திரும்பினோம்.

6. "CATCH THE VISION". வியாசம் 2வது பக்கம் THE PILLAR OF FIRE என்ற தலைப்பின் அடியில் As John the Baptist forerun the first comming of Christ, you will forerun His second comming என எழுதப்பட்டு அங்கு சகோ. பிரன்காமின் புகைப்படம் காணப்பட்டது. இதுபோன்று மணவாட்டி கூடாரம் வெளியிட்ட சிறு புத்தகம் 14வது பக்கத்தில் சகோ. பிரன்காம் புகைப்படத்தை பிரசுரித்து அதன் கீழ் அக்கினி ஸ்தம்பம் என்ற தலைப்பின் கடைசிப் பகுதியில் கிறிஸ்துவின் முதலாம் வருகையிலே முன்னோடியாக யோவான் ஸ்நானன் வந்தது போல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே நீ முன்னோடியாக இருப்பாய் என்று எழுதப்பட்டிருந்தது.

7. இந்த உபதேசம் வெளி. 10:6 வசனத்தையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் மறுதலிப்பதாக, புரட்டுவதாகக் கண்டேன். சகோ. பிரன்காம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல. இது பிசாசின் ஒரு நய வஞ்சகமான உபதேசம். பிரியமானவர்களே சபையில் கள்ளப் போதர்கள் உண்டு. 2 பேது. 2:1. ஆதலால் அவர்களைக் கொண்டு தந்திரமான போதகங்களும் உண்டு. எபே 4:14. இவர்கள் வேதப்புரட்டுகளைத் தந்திரமாக நுழையப் பண்ணுகிறார்கள்.

8. இந்த எழுத்துக்கள், உபதேசம் வேதப்புரட்டு என்று நான் சொல்லுவதற்குரிய ஆதாரங்கள் என்ன? அவைகளை நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்திற்குரியச் செய்தியிலிருந்து இங்கு காண்போம்.

9. தேவவாக்கியம் இதுகுறித்து ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே என்று கூறுகிறது. வெளி. 10: 6 ஏழாம் தூதனுடைய நாட்களிலே என்று கூறவில்லை. இன்று ஏழாம் தூதன் நம் மத்தியில் இல்லை. அவர் நித்திரையடைந்து விட்டார். ஆனால் அவருடைய சத்தம் உலகம் எங்கும் ஒளிநாடாக்களின் வாயிலாக இந்நாள்வரை தொனித்துக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக அது கர்த்தருடைய வருகை பரியந்தம், அதாவது மணவாட்டி சபை எடுத்துக் கொள்ளப்படும் வரை தொனித்துக் கொண்டே இருக்கும். ஏனென்றால் அந்த சத்தம் மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறது. இந்த சத்தம் 1 தெச. 4:16ல் கர்த்தருடைய வருகைக்கு முன்சென்ற ஆரவாரம் ஆகும். அதாவது இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்ற செய்தியாகும். மத் .25:16. இந்தச் செய்தியினால் புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்தச் செய்தியாளன் இவர்கள் மத்தியில் இல்லை. ஆனால் அவருடைய செய்தி இவர்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறது. இவர்கள் செய்தியாளனைப் பார்க்க வேண்டிய தேவையில்லை. மாறாக செய்தியாளனுடைய சத்தத்தைக் கேட்டு, செய்தியைக் கேட்டு, ஆரவாரத்தைக் கேட்டு, தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

10. இதுகுறித்து இக்காலச் செய்தி என்ன கூறுகிறது? 1933ம் ஆண்டு, ஜீன் மாதம், 15ம் தேதி மதியம் ஒகியோ நதிக்கரையில் சகோ. பிரன்காம் சுமார் 500 பேருக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கவிருந்தார். மதியம் சுமார் 2 மணிக்கு 17வது நபருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கையில், ஒரு தெய்வீக வெளிச்சம் நதியின் அடுத்தப் பக்கம் விழுந்தது. அது ஒரு நட்சத்திரம் வானத்தில் இருந்து விழுந்தது போல இருந்தது. அதில் இருந்து மேலேபார் என்ற சத்தம் உண்டாயிற்று. தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் காட்சியளித்தார். தேவன் இறங்கினார். யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டது போல உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் சென்று உலகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் போகும் என விளம்பிற்று. இது குறித்து செய்தி இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று. ( 19.2.1965.) பத்தி 143-145 வரை நீங்கள் தியானிக்கலாம்.

11. கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல, உன்செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருப்பது இந்தச் செய்தியே. அப்படியே கர்த்தருடைய தூதன் உரைத்தார். (கே.ப. 2:12. பக்கம் 100. பத்தி 384)

12. அந்தத் தூதன் என்னிடம் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாய் யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல உன் செய்தி என்று கூறினார். நான் இந்தச் செய்தியை எடுத்துக் செல்ல வேண்டும். அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாய் இருக்கும். (இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல் ( 1.6.1962. )பத்தி 58).

13. A Voice came that shook all around the places there, as John, the Baptist was sent to forerun the first coming of Christ, the Message that is given you will be forerunning the Second Coming of Christ. **Not that I would be the forerunner but the Message was the forerunning** (Testimony of william Branham(2.19.1960). பாருங்கள், இங்கு சகோ. பிரன்காம் திட்டவட்டமாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அவர் அல்ல மாறாகச் செய்தியே என்று கூறுகிறார்.

14. எலியாவின் பலத்திலே காட்சியளிக்க எழும்பும் ஒரு மனிதன் உண்டு (மல். 4:5-6. மாற் 9:13, வெளி. 10:6) அவன் காட்சியளிக்க எழும்புவான். அவனிடம் ஒரு செய்தி இருக்கும். அந்தச் செய்தி வந்து நேராக வார்த்தையுடன் ஒன்றுபடும். இந்த நேரத்திலே தான் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். (இந்த வேதவாக்கியம் இன்றையத் தினம் நிறைவேறிற்று (19.2.1965.) பத்தி 142)

15. உங்களுக்கு அது ஞாபகம் உள்ளதல்லவா? கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல உன் செய்தி .... கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாய் இருப்பது இந்தச் செய்தியே. அப்படிதான் கர்த்தருடைய தூதன் உரைத்தார். அந்த தூதனே கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல, நீ இந்தச் செய்தியுடன் அனுப்பப்பட்டிருக்கிறாய். இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும் செய்தியை அறிவித்தான். இப்பொழுது செய்தி (கே.ப. 123 ,பத்தி 384 & 385)

16. முப்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் அங்குள்ள நதியண்டை என்னிடம் கூறின விதமாக எல்லாமே அப்படியே நிறைவேறிவிட்டது. ஒருக்கால் நான் அதை செய்ய மாட்டேன். ஆனால் இந்தச் செய்தியானது இயேசுவை உலகத்துக்கு அறிமுகப்படுத்தும். யோவான் ஸ்நானன் அவருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டது போல இந்தச் செய்தியும் அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும். யோவான்: உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான். யோ. 1:29. எனவே எல்லாவகையிலும் இது இணையாக உள்ளது. அது அப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும். செய்தியானது போய் கொண்டிருக்கும் (பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள் ( 29.12.1963 ) பக்கம் 14, (முதல் பத்தி) ஆம், பிரியமானவர்களே செய்தியானது எடுத்துக் கொள்ளப்படுதல் வரைப் போய்க் கொண்டிருக்கும்.

17. அந்தத் தூதன் வந்து யோவான் பழையஏற்பாட்டை முடித்து இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்த அனுப்பப்பட்டது போல, உன் செய்தி அந்த தளர்ந்த முனைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வந்து, அவருடைய வருகைக்கு சற்று முன்பாக மேசியாவை அறிமுகப்படுத்தும் (ஐயா, இது தான் முடிவின் அடையாளமா? பத்தி 363) பாருங்கள், உன் செய்தி மேசியாவை அறிமுகப்படுத்தும். அங்கு யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்துகிறான். ஆனால் இங்கு சகோ. பிரன்காம் அல்ல. மாறாக அவர் கொண்டு வந்த செய்தி. இந்த 363 வது பத்தியை மொழி பெயர்ப்பாளர்கள் சரியாக மொழி பெயர்க்கவில்லை. அவர்கள் உன் செய்தி என்பதை ஒரு செய்தி என மொழி பெயர்த்துள்ளார்கள் இது ஆங்கிலத்தில் **your Message** என்று உள்ளது. இவர்களுடைய பழைய மொழிபெயர்ப்பில் உன் செய்தி என்று சரியாக உள்ளது (பழைய பதிப்பு பக்கம் 70, பத்தி 4) ஆனால் இந்த வெட்ககேடான புதிய மொழி பெயர்ப்பில் ஒரு செய்தி என்று உள்ளது. பொதுவாக பழைய மொழிபெயர்ப்பு, புதிய மொழி பெயர்ப்பு எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற பழமொழிக்கேற்றது போல் அமைந்துள்ளது. WBGNS ல் சாமி பூஜை செய்யும் ஆசாரியர்கள் அகற்றப்பட்டாலொழிய அது உருப்படாது.

18. இதோடு முடிந்து விடவில்லை. இன்னொரு இவர்களது மதிகேடான மொழிபெயர்ப்பைப் பாருங்கள். கடைசிகாலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள் என்ற செய்தியில் (25.7.1965) 269ம் பக்கம் ஆங்கிலத்தில் இவ்வாறாக இருக்கிறது. **It was not the angel, his Message.** இதை தமிழில் அது தூதன் அல்ல என்று மட்டும் மொழி பெயர்த்து அவனுடைய செய்தி என்பதை விட்டு விட்டார்கள். இப்படியாக எந்தச் செய்தியை எடுத்தாலும் மொழி பெயர்ப்பில் கூட்டுதல், குறைத்தல், தவறுகள், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. தவறு நடக்கத்தான் செய்யும் என்று குரு ஆதரித்துப் பேசும்போது சிஷ்யர்களுக்கு என்ன? கொண்டாட்டம் தானே! WBGNS ஒரு குடும்ப ஆட்சியாக இருப்பதுதான் இந்த அனைத்து பிரச்சனைகளுக்கும் காரணம். பாஸ்டர், மூப்பர், விசுவாசி, பிதா, மகன். இது என்ன? கூட்டுக் குடும்பம் ஆட்சியா? கொள்ளையா? ஊதியமா? தொழிலா? இந்தப் பாதகர்கள் ஊழியத்தை ஒரு இழிவான ஆதாயத் தொழிலாக மாற்றிவிட்டார்களே.

19. பிரியமானவர்களே, இந்தச் செய்தி தொகுப்பின் சாராம்சமே கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள் என்ற செய்தியில் பத்தி 269ல் தான் அடங்கியிருக்கிறது. இந்த பகுதியைக் கீழே கொடுத்துள்ளேன். என்னைக் குறித்து நான் பேசிக் கொண்டேன் என்று நீங்கள் ஒருக்கால் நினைக்கலாம். நான் ஒரு சத்தமாக இருக்க விரும்புகிறேனேயன்றி, அதற்கும் எனக்கும் வேறு எந்த தொடர்பும் இல்லை. நான் மிருகங்கள் பிடிப்பவனாக ஆகவே விரும்பினேன். ஆனால் நான் இவ்விதம் இருக்க வேண்டும் என்று பிதாவானவர் சித்தம் கொண்டார். எனவே நான் இதைத் தெரிவிக்கிறேன். இதை நான் அறிவிக்க தீர்மானித்து விட்டேன். அந்த நதியினிடத்தில் பிரதியட்சமானவர் நான் அல்ல. அவர் பிரதியட்சமாகும் போது நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். இந்த அற்புதங்களையெல்லாம் செய்பவன் நான் அல்ல. வரப்போகும் காரியங்களை பிழையின்றி அறிவிப்பவன் நான் அல்ல. அவர் இத்தகையச் செயல்களை புரியும்போது நான் அவர் அருகில் இருக்கிறேன். அவர் என்னைத் தம் சத்தமாக உபயோகித்து வருகின்றார். என் மூலம் அவர் பேசுகிறதற்கென என்னை நான் அவருக்கு முற்றிலும் அர்ப்பணித்து விட்டேன். அது ஏழாம் தூதன் அல்ல! அது மனுஷகுமாரன் வெளிப்படுத்தலாகும். அது தூதன் அல்ல. அவனுடைய செய்தி (இந்த அவனுடைய என்பதுதான் தமிழ் மொழி பெயர்ப்பில் இல்லை. சாத்தான் மொழி பெயர்ப்பாளனுடைய கண்களைக் குருடாக்கிவிட்டான். எத்தனை திருத்தப்பட்ட மொழி பெயர்ப்புகள் வந்துதான் பிரயோஜனம் என்ன? எல்லாமே கூலிக்கு மாறடிக்கும் ஊழியமாகவே இருப்பது மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. கோணலானதை நேராக்கக் கூடாது. WBGNS ஐ திருத்த முடியாது. இந்நாட்களில் இதில் இருப்பவர்கள் அனைவரையும் வெளியேற்றவேண்டும். அவர்கள் வெளியேறுவார்களா? நிச்சயமாக மாட்டார்கள்! ஏன்? இவர்கள் வெளியே சென்றால் மாதம் ரூ.500/- கூட சம்பளம் கிடைக்குமா என்பது சந்தேகமே. இந்த சுகபோகமான வேலையை, வாழ்க்கையை விட்டு வெளியே வர முடியுமா? முடியவே முடியாது1. இவர்களுக்கு இந்தப் பணி ஒரு வெட்கக்கேடா?) மறை பொருளாயிருந்த தேவனுடைய இரகசியம் வெளிப்படுதலாகும். அது மனிதன் அல்ல. அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. அவன் அவரால் அனுப்பப்பட்ட தூதன். மனுஷகுமாரன் எனப்படுவது கிறிஸ்து. அவரைத்தான் நீங்கள் புசித்து வருகின்றீர்கள். நீங்கள் மனிதனின் வார்த்தையைப் புசிக்கவில்லை. மனிதனின் வார்த்தைகள் தவறுதலாகிப் போக ஏதுவுண்டு. ஆனால் நீங்களோ என்றென்றைக்கும் தவறாத மனுஷகுமாரனின் சரீரமாகிய வார்த்தையைப் புசித்து வருகின்றீர்கள்.

20. பிரியமானவர்களே, இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டீர்களா? இந்த ஊழியம் மனுஷகுமாரனுடையது. மனுஷகுமாரன் ஒரு தீர்க்கத்தரிசி. ஏழாம் சபைக் காலத் தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்தினபடியால் அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். இன்று செய்தியைக் கொண்டு வந்தவர் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்து விட்டார். ஆனால் செய்திக்குரியவரை, செய்தியை நாம் புசித்துக் கொண்டு நம்மை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறோம். **The man (the messenger) is gone home, but the Ministry continues since it is Christ's Ministry.**

21. கர்த்தாவே, அழிவுக்கேதுவான களிமண்ணாகிய ஊழியர்களை விட்டு பார்வையைத் திருப்பி சர்வ வல்லவராகிய அவரை நோக்கிப் பார்க்கட்டும். நாங்கள் முடிவுள்ளவர்கள் என்பதை நாங்கள் அறிந்து இருக்கிறோம். கர்த்தாவே நாங்கள் யாராக இருந்தாலும் சரி, நாங்கள் அழிவுள்ளவர்கள்தான். செய்தியாளன் அல்ல. செய்திதான் ((முற்றிலுமானவர். (30.12.1962.) பத்தி 374)

22. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் நின்று இதோ உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று அவரை அறிமுகப்படுத்தினான். அவ்வாறாக கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையில் அவரது மணவாட்டியை சகோ. பிரன்காம், கிறிஸ்துவுக்கு அறிமுகப்படுத்துவார் என்று இந்த மாறுபாடான உபதேசத்தை கொண்டு வருகிறவர்கள் கருதுகிறார்கள். நித்திரையடைந்த சகோ. பிரன்காம் மறுபடியுமாக விசேஷமான முறையில் உயிர்த்தெழுந்து வந்து மணவாட்டியை அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொள்ளுவார் என்ற குருட்டு நம்பிக்கையில் இருக்கிறார்கள். சகோ. பிரன்காம் ஏழாம் சபைகாலத் தூதன் மட்டுமே என்பதை இவர்கள் மறந்து விட்டார்கள். கிறிஸ்துவின் மணவாட்டி ஏழு சபைக் காலங்களிலும் இருக்கிறாள் என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை. ஏழு சபைக் கால மணவாட்டியையும் சகோ. பிரன்காம் (ஏழாம் சபைக் காலத் தூதன்) கிறிஸ்துவுக்கு அறிமுகப்படுத்துவார் என்பது இவர்களது எண்ணம். ஆதலால்தான் செய்தி முன்னோடி என்பதை இவர்கள் புறக்கணித்து செய்தியைக் கொண்டுவந்த சகோ. பிரன்காம் முன்னோடி என்கிறார்கள். முந்தின ஆறு சபைக் காலங்களில் உள்ள மணவாட்டிக்கும் ஏழாம் சபைக் காலத் தூதனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை இவர்கள் உணர வேண்டும்.

23. மேலும் இவர்கள் செய்தியும், செய்தியாளனும் ஒன்றே ; செய்தியையும், செய்தியாளனையும் பிரிக்க முடியாது ; ஆதலால் நித்திரையடைந்த செய்தியாளன் மீண்டும் தனிப்பட்ட முறையில் உயிர்தெழுந்து கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையில் அவரது மணவாட்டியை அவருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று விசுவாசிக்கிறார்கள். இது ஒரு அறிவுக்கேற்ற எண்ணம் அல்ல. பிரியமானவர்களே செய்தியும் செய்தியாளனும் ஒன்றுதான். அது உண்மையே. ஆனால் இப்பொழுது செய்தியைக் கொண்டு வந்த செய்தியாளன் நம் மத்தியில் இல்லை. செய்தியாளன் நித்திரையடைந்து விட்டார். ஆதலால் செய்தி மட்டுமே நம் மத்தியில் உள்ளது. அது உலகம் முழுவதும் சென்று கொண்டு ஏழாம் சபைக் காலத்தில் வாழும் மணவாட்டியை மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறது. இது தேவனுடைய வார்த்தையின் (வெளி. 10 : 6) நிறைவேறுதலாகவும். ஓகியோ நதிக்கரையில் தேவன் இறங்கி கூறின வார்த்தையின் நிறைவேறுதலாகவும் இருக்கிறது. ஆதலால் செய்தியாளன் உயிர்தெழுந்து வந்து மணவாட்டியை அறிமுகப்படுத்த வேண்டும் என்பது வார்த்தைக்கு, செய்திக்கு புறம்பான ஒரு லௌகீக ஞானமாகும். எடுத்துக் கொள்ளப்படுதலில் ஏழாம் சபைக் கால மணவாட்டி மட்டும் அல்ல ஏழு சபைக் கால மணவாட்டியும் பங்கு கொள்கிறார்கள். அவர்கள் அனைவர்களையும் கிறிஸ்துவிற்கு அறிமுகப்படுத்த ஏழாம் சபைக் காலத் தூதன் யார்? அது அவருடைய ஊழியத்திற்கு புறம்பானது.

24. ஏழாம் சபைக் கால தூதனும் தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் 18.12.1965 அன்று ஒரு வாகன விபத்துக்குள்ளானார். 24.12.1965 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரை அவருடைய குடும்பத்தினர் அடக்கம்பண்ண அனுமதிக்கவில்லை. அவர் உயிரோடு எழுந்திருப்பார் என்று வேதத்திற்குப் புறம்பான ஆசையில் இருந்தார்கள். அவர் நித்திரையடைந்த மூன்றாம் நாள் இயேசு கிறிஸ்துவைப் போன்று உயிர்த்தெழுந்திருப்பார் என நினைத்தார்கள். ஏனென்றால் அவர்கள் அவரை கிறிஸ்துவாகத் தான் விசுவாசித்தார்கள். கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என்ற உபதேசம் அவர்களுடைய மூட நம்பிக்கையில் இருந்துதான் புறப்பட்டு வந்தது. சிலர் அவர் 40 நாட்களில் உயிர்த்தெழுந்து விடுவார் என்று நினைத்தார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. பின் எப்படியும் 1966 ஈஸ்டர் ஞாயிறு அன்று உயிர்தெழுவார் என்ற குருட்டு நம்பிக்கையில் இருந்தார்கள். அதுவும் நடைபெறவில்லை. முடிவாக 11.4.1966 அன்று ஏறக்குறைய 110 நாட்கள் கழித்து அவரை அடக்கம் பண்ணினார்கள். இதோடு இவர்கள் நின்று விட்டார்களா என்றால் இல்லை. 1977ல் சகோ. பிரன்காம் லவோதிக்கேயா சபைக்காலம் முடிவடையும் என்று முன்னறிவித்ததால் (ஆவிக்குரிய தீர்க்கதரிசனமாக அதை அவர் உரைக்கவில்லை) அவர் அந்த ஆண்டில் உயிர்த்தெழுவார் என்று நினைத்தார்கள். அந்த எண்ணமும் அவர்களை மோசம் போக்கியது. ஆதலால் இப்பொழுது எப்படியும் எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு சில நாட்களுக்கு முன்பு உயிர்தெழுந்து வெள்ளைக் குதிரை மீது வருவார், வெள்ளைக் கழுகு மீது வருவார் என்று பலவிதமான மாயையான நம்பிக்கையில் இருக்கிறார்கள். ஆனால் இது நடக்குமா என்றால், ஒருக்காலும் நடக்கவே நடக்காது! ஏனென்றால் இந்த எண்ணங்கள் யாவும் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரியச் செய்திக்கும் முரண்பட்டது.

25. ஆனால் ஏழாம் சபைக்காலத் தூதன் பிரன்காம் இவர்களது குருட்டு நம்பிக்கையில் இல்லை. அவர் என்னக் கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள்.ஒரு நாளில் அவர் அழைக்கும்பொழுது நான் மரித்தோரிலிருந்து எழும்பி வருவேன். தேவ எக்காளம் அப்பொழுது தொனித்திடும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடே எழுந்திருப்பார்கள். நான் உயிரோடே இருப்பேனாகில் ஒரு ஷனத்தில் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாவேன். அவ்விதமாய் ஆகாயத்தில் கர்த்தரை சந்திக்கும்படி மீதியாயிருக்கிறவர்களோடே ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவேன். (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், பாகம் 2. பக்கம் 967, பத்தி 156) இங்கு சகோ. பிரன்காம் 1 தெச. 4 : 16 & 17, மற்றும் 1 கொரி. 15 : 52ஐ மனதில் கொண்டு தான் நித்திரையடைந்த பின்பு கர்த்தருடைய வருகை வருமானால் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருக்கும் போது தானும் அவர்களோடு எழுந்திருப்பேன் என்று கூறுகிறார். மேலும் உயிரோடிருப்பேனாகில் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாகி விடுவேன் எனவும் கூறுகிறார்.

26. Voice of God என்ற பெயரை சத்தியத்திற்கு புறம்பாக வைத்துக் கொண்டும், மணவாட்டி கூடாரம் என்று கூறிக் கொண்டு ஸ்தாபன ஆவியில் இயங்கி வரும் இந்த சபையும் உங்களை எப்படி சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தமுடியும்? கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமானவர்களே, நாமோ எடுத்துக் கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்திற்காக, நம்முடைய சரீர மீட்புக்காக சகோ. பிரன்காம் உயிர்தெழுதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் நித்திரையடைந்த சகோ. பிரன்காம் மரித்த மற்றவர்களோடு கூட நம்மையல்லாமல் பூரணப்படாதபடிக்கு நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார். எபி 11.40.

27. நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப் படுகிறது எதற்கு? புத்திர சுவிகாரத்திற்கு. இதில் ஏழாம் சபைக்காலத் தூதனும் தீர்க்கதரிசியுமாகிய சகோ. பிரன்காம் அடங்குவார். ஆம், ஆவியின் முதற்பலனை பெற்ற நாம் நம்முடைய சரீர மீட்பு மூலம் நம்முடைய புத்திர சுவிகாரம் வருகிறதற்கு காத்திருந்து நமக்குள்ளே தவித்துக் கொண்டிருக்கிறோம். ரோ. 8 :19-23. சகோ. பிரன்காமுக்கென்று பிரத்தியேகமான சரீர மீட்போ. புத்திரசுவிகாரமோ கிடையாது. இந்நிலையில் நம்மையல்லாமல் அவர் பூரணப்பட முடியாது.

28. பிரியமானவர்களே, கடைசியாக நான் உங்களுக்குப் புத்திமதி கூறி எழுதுகிறது என்னவென்றால் :

செய்தியானது அவிசுவாசிகளிலிருந்து விசுவாசிகளை வேறுபிரிக்கிறது. சிலர் அதற்கு கீழ்படிந்து அத்துடன் நடப்பார்கள். மற்றவர்கள் நடக்கமாட்டார்கள். சிலர் சாயங்கால வெளிச்சத்துடன் நடப்பர். சிலர் நடவாதிருப்பார்கள். அது சாயங்கால வெளிச்சமோ அல்லது இல்லையோ என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்ளப்போகிறீர்கள்? அதை வார்த்தையோடு சோதித்துப் பாருங்கள். ஒரே ஒரு வார்த்தையால் அல்ல. ஒன்று சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையோடும், அது சரியா அல்லது தவறா என்று பாருங்கள். (சாயங்காலச் செய்தியாளன் பத்தி 253 & 254)

29. பரிசுத்தஆவி இறங்கி வந்து எடுத்துக் கொள்ளப்படுதலுக்கென்று முன்குறிக்கப்பட்ட ஜனங்களை உயிர்ப்பிக்கிறது. அவன் உண்மையான கழுகாக இருந்தால் அவனுடைய காலத்திற்குரியச் செய்தியை அவன் புரிந்து கொள்வான். (ஈஸ்டர் முத்திரை (10.4.1965 ) 24 பக்கம் முடிவு 25 பக்கம் தொடர்ச்சி) ஆம் பிரியமானவர்களே, நீங்கள் கழுகாக இருந்தால் தான் இந்த செய்தித் தொகுப்பை புரிந்து கொள்ள முடியும். நீங்கள் ஒரு காகமாக இருந்தால் நீங்கள் இதை ஒருக்காலும் புரிந்து கொள்ள முடியாது.

30. யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக இருந்தது போல சகோ. பிரன்காம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி என்பது பிரகாம் கிறிஸ்து உபதேசத்தில் மறைமுகமான மற்றொரு பகுதியாகும். பிரன்காம், பிரன்காம் என்று கூறிக்கொண்டு ஏழாம் சபைக் காலத் தூதனுக்கு காவடி எடுத்து, துதிபாடிக் கொண்டிருக்கும் கூட்டத்தைச் சேர்ந்து, சார்ந்து உங்கள் ஆத்துமாவை இழந்துவிடாதீர்கள். ஆதலால் பிரியமானவர்களே, நீங்கள் நயவசனிப்பினாலே ஒருவனாலும் வஞ்சிக்கப்படாதீர்கள். எந்தவிதத்திலும் ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதப் படிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்கள் எல்லாரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

பிப்ரவரி, 2004.

கிறிஸ்துவின் அன்பில்,
சகோ. காலேப் யோசுவா.

## 2004 ஜனவரி செய்தித் தொகுப்பு

ஜனவரி செய்தித் தொகுப்பின், கணிப்பொறி தட்டச்சு பணி இது வரை முற்று பெறாத நிலையில் உள்ளது. அது வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் தூதன், யோவான் விழுந்து வணங்கிய அந்தத் தூதன் யார் என்பதைக் குறித்தான செய்தித் தொகுப்பு ஆகும். கர்த்தருக்கு சித்தமானால் இது பிப்ரவரி முடிவுக்குள் வெளிவரும் என நினைக்கிறேன். ஜெபியுங்கள்.

## அன்பின் விருந்து.

ஜனவரி மாத அன்பின் விருந்து எனது இல்லத்தில் 18.01.04. அன்று நடந்தது. பிப்ரவரி மாத அன்பின் விருந்து 15ம் தேதி மாலை நடைபெறும். பிரியமானவர்களே, நான், என்னுடைய சபை, என்னுடைய பாஸ்டர் என்ற ஒரு குறுகிய வட்டத்திற்குள் ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்காமல் ; நாங்கள், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, இக்காலத்திற்குரியச் செய்தியில் உள்ளவர்கள் மத்தியில் ஒரு ஐக்கியம் என்ற ஒரு பரந்த மனப்பான்மையுடன் ; ஆவியில் ஏவப்பட்டவர்கள் எங்களுடன் வந்து கலந்து கொள்ளும்படி கர்த்தருடைய நாமத்தினால் கேட்டுக் கொள்கிறேன்.